P.R. no: 28 13/1/09

# PRESS RELEASE

On the occasion of Pongal Day, 2009, the Hon'ble Chief Minister of Tamil Nadu has ordered for the award of Tamil Nadu Chief Minister's Constabulary Medals to 1500 Police personnel in the rank of Police Constables, Head Constables and equivalent ranks; the Tamil Nadu Chief Minister's Fire Service Medals to 80 Fire and Rescue Services Personnel in the rank of Firemen Drivers, Upgraded Leading Firemen and equivalent ranks; and the Tamil Nadu Chief Minister's Prison Medal for Good Service to 20 Prison Service Personnel in the rank of Grade-I and Upgraded Grade-I Warders. The recipients of these Medals are eligible to draw a monthly allowance of Rs.40/- or Rs.50/- as the case may be, with effect from 1st February, 2009, depending upon their ranks.

2. These medals will be presented to the recipients, at District Headquarters, in a ceremonial parade on a convenient date to be fixed by the Director General of Police / Director, Fire and Rescue Services and the Director General of Prisons.

3. In addition to the above awards, the Hon'ble Chief Minister of Tamil Nadu has ordered for the award of the Tamil Nadu Chief Minister's Police Medal for Excellence in Technical and Specialised Services to 6 personnel, 2 each from Technical Staff of Police Radio Branch, Police Photographers and Dog Squad. The recipients of this Medal are eligible for a lump sum grants of Rs.3,000/- and Rs.2,000/- depending upon their ranks. This Medal will be presented to the recipients by the Hon'ble Chief Minister at a function to be held later.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

for Principal Secretary to Government
Home Department

செ. வெ. எண் : 28    13/1/09

**பத்திரிகை வெளியீடு**

2009 ஆம் ஆண்டு பொங்கல் தினத்தையொட்டி, தமிழக முதலமைச்சரின் காவலர் பதக்கம், காவல்துறையைச் சார்ந்த காவலர்கள், தலைமை காவலர்கள் மற்றும் அதற்கு சமமான பதவியில் உள்ள 1500 பேருக்கும், தமிழக முதலமைச்சரின் தீயணைப்புத் துறை பதக்கங்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையைச் சார்ந்த ஓட்டுநர் தீயணைப்போர், தரம் உயர்த்தப்பட்ட முன்னணி தீயணைப்போர் மற்றும் அதற்கு சமமான பதவியில் உள்ள 80 பேருக்கும், மற்றும் தமிழக முதலமைச்சரின் சிறைத்துறை சிறப்புப் பணிப் பதக்கம், அத்துறையைச் சார்ந்த முதல்நிலை மற்றும் தரம் உயர்த்தப்பட்ட முதல்நிலை வார்டர்கள் 20 பேருக்கும் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. இப்பதக்கம் பெறுவோர் 2009-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1–ம் தேதி முதல் முறையே ரூ.40/– மற்றும் ரூ.50/- ஆக, அவரவர்களின் தகுதிக்கேற்ப மாதாந்திரப் படியாகப் பெற தகுதியுடையவர்களாவார்கள்.

2. இப்பதக்கங்கள் மாவட்ட தலைநகரங்களில் பின்னர் நடைபெறவுள்ள அரசு விழாவில், காவல்துறை தலைவர், இயக்குநர், தீயணைப்பு மீட்பு பணிகள் துறை மற்றும் சிறைத்துறை காவல்துறை தலைவர் அவர்களால் தேதி நிர்ணயிக்கப்பட்டு விருது பெறுகின்ற அனைவருக்கும் வழங்கப்படும்.

3. மேற்கண்ட விருதுகளைத் தொடர்ந்து, தமிழக முதல்வரின் காவல் தொழில் நுட்ப சிறப்பு பணிப்பதக்கம் ஒவ்வொரு பிரிவிற்கும் 2 நபர்கள் வீதம் முறையே காவல் தொழில் நுட்பப் பிரிவு, காவல் படப்பிடிப்பாளர்கள் மற்றும் நாய் படையில் பணிபுரியும் மொத்தம் 6 நபர்களுக்கு வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. இப்பதக்கம் பெறுவோருக்கு ரூ.3000/-, மற்றும் ரூ.2000/- முறையே அவர்களது பணி நிலையின் அடிப்படையில் ஒருமுறை வழங்கப்படும் தொகையாக அளிக்கப்படும். இப்பதக்கம் பின்னர் நடைபெறவுள்ள விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விருது பெறுகின்ற அனைவருக்கும் வழங்கப்படும்.

மாலதி சுப்ரமணியன்
அரசு முதன்மைச் செயலர், உள்துறை. உ.ா.கு.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9